நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42-ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## M.C. No.14/2024

## P.W. 1 -ன் வாக்குமூலம்

**( புகார்தாரர் தரப்பு சாட்சி)**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீ நிதி |
| தந்தை / கணவர் பெயர் | : | ராகேஷ் |
| கிராமம் | : | கொளத்தூர் |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 24 |

*1969-ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969-ஆம் வருடத்திய 44-வது மத்திய சட்டம் )-ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025-ஆம் வருடம், ஜுன் மாதம், 18-ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிர் மனுதாரர் ஆஜரில் இல்லை அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:- 03.00PM)

1. நான் தற்போது திருமணத்துக்கு பிறகு நாங்கள் தனி குடித்தனம் நடத்தும் போது வீட்டு வாடகை உள்ளிட்ட வீட்டு செலவுகள் அத்தனையும் எனது கணவர் தான் செய்து வந்தார் என்றால் சரிதான். எனது கணவரின் சகோதரர் திருமணமாகி பெங்களூரில் ஒரு குழந்தையுடன் தனியாக வசித்து வருகிறார் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் 8 பத்தியில் என்னுடைய நகைகள் எனது கணவர் வசம் இருப்பது நல்லது என்று அவரது பெற்றோர் சொன்னதால் நான் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் என்ன தேதியில் அவ்வாறு சொன்னார்கள் என்று எனக்கு தெரியாது.

2. என் அப்பா கொடுத்ததாக சொல்லும் காரின் பதிவு எண் எனக்கு தெரியாது. பத்தி 17–ல் எனது கணவர் எனது தாலியை பிடுங்கிக் கொண்டதாக நான் சொல்லியுள்ள நிகழ்வு கோயம்புத்தூரில் 2023 ஆம் வருடம் அக்டோபர் மாதம் நடைபெற்றது.

3. பத்தி 20–ல் நான் குறிப்பிட்ட 20.12.2023 என்ன கிழமை என்று எனக்கு தெரியாது. நான் தற்போது எனது பெற்றோர் வீட்டில் இருந்து வருகிறேன். எனது பெற்றோர் எனது பாட்டி வீட்டில் குடி இருக்கிறார்கள் அந்த வீட்டில் இரண்டு வீடுகள் தனித்தனியாக உள்ளது. அதில் ஒன்றில் நானும் எனது மகனும் தனியாக எனது பாட்டிக்கு வாடகை கொடுத்து தனியாக வசித்து வருகிறோம்.

4. நான் பிரமாண பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளபடி எனது கணவருக்கும் உஷா நந்தினி என்பவருக்கும் கள்ளத்தொடர்பு இருப்பது உண்மை. அதனால் பிரச்சனைகள் கொஞ்ச நாள் இருந்தது என்றால் சரிதான். அது தொடர்பாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை ஆனால் எனது மாமனார் மாமியாரிடம் மேற்படி பிரச்சனை குறித்து சொல்லியுள்ளேன். உண்மையில் எனது கணவருக்கு உஷா நந்தினி என்பவருடன் எந்தவித தொடர்பும் இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக குறிப்பிட்டுள்ளேன் என்றாலும் சரியல்ல.

5. சார்பு நீதிமன்றத்தில் H.M.O.P 20/2024 என்ற எண்ணில் சேர்ந்து வாழ கோரி தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படுவது மேற்படி வழக்கில் நான் தாக்கல் செய்த மனுவின் சான்றித நகல் என்றால் சரிதான். ( மேற்படி H.M.O.P 20/2024–ல் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சான்றிட்ட நகல் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).

6. மேற்படி மனுவில் பத்தாவது பாராவில் எதிர்மனுதாரர் தாயாருக்கு உடல்நிலை

சரியில்லை என்ற காரணத்திற்காக எனது நகைகளை நானாக அடமானம் வைத்து செலவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.11–வது பாராவில் அந்த நகைகளை மீட்க எனது கணவரின் சகோதரரிடம் பணம் கேட்டு அவர் கொடுக்கவில்லை என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேலும் அந்த மனுவின் 22 வது பாராவில் 20.01.2024–ஆம் தேதியில் மனுவில் குறிப்பிட்டுள்ள நாம் தமிழர் கட்சியை சேர்ந்த வழக்கறிஞர் தீபக்குமார் மனுதாரரின் வீட்டுக்கு வந்து ஒரு மூட்டை சர்க்கரையும் டீசலும் கொண்டு வந்து கலந்து உங்களை தீயிட்டு கொளுத்தி விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லி உள்ள சங்கதியை வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட மனுவிலும் குறிப்பிடவில்லை.

( **தற்போது இந்த நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணை செய்யும் கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தீபக்குமார் என்பவரை பற்றி தான் மேற்கண்ட வழக்கு சங்கதிகள் இருப்பதாலும், மேற்படி வழக்கறிஞருக்கு இந்த வழக்கு நிகழ்வுகளில் சம்மந்தம் இருப்பதாக சாட்சியம் அளிக்கப்படுவதாலும், இந்த நீதிமன்றம் வேறு வழக்கறிஞர் வைத்து குறுக்கு விசாரணை செய்ய நீதியின் நலன் கருதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில், எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க வேறு வழக்கறிஞர் வைத்துக் கொள்ள வேண்டி குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**)

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–03.30PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**